
REVIEW OF RESEARCH
IMPACT FACTOR : 5.7631(UIF) UGC APPROVED JOURNAL NO. 48514 ISSN: 2249-894X

VOLUME - 8 | ISSUE - 1 | OCTOBER - 2018

# தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் திருமால் வழிபாடு

**N. Jeyakkodi[1] and Dr. S. Prasath[2]**
[1]M.Phil. Scholar, Bharathiar University, Coimbatore, Tamil Nadu.
[2]Assistant Professor, Department of Yoga for Human Excellence ,
WCSC Vision, SKY Research Centre, Aliyar, Pollachi, Coimbatore, Tamil Nadu.

**ஆய்வுச் சுருக்கம்:**
*திருமால் வழிபாடு மிகப் பழமையானது. அது பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திலுள்ள அகத்திணையியல் ஐந்தாவது நூற்பாவில் திருமால் வழிபாடு பற்றிய குறிப்பு காணப்படுகிறது. திருமால் முழுமுதற் பொருள் என்பதால் அவருக்கு முதலில் கோவில்கள் எழுந்த முல்லை நிலத்தை நிலவரிசையில் முன்சொன்னார். சங்க இலக்கியங்களிலுள்ள பரிபாடல், நற்றிணை, கலித்தொகை, திரிகடுகம் ஆகிய நூல்களில் திருமால் பற்றிய குறிப்புகள் உள்ளன. பரிபாடலில் திருமால் அனைத்துமாயும், அனைத்தினுட் பொருளுமாயும் விளங்குகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. அவரே உலகின் காரணப்பொருள் என்று நற்றிணைப் பாடலில் உள்ளது. கலித்தொகையிலும் திரிகடுகத்திலும் திருமால் கதைக் குறிப்புகள் உள்ளன. திருமால் முழுமுதற் பொருளாக எண்ணி அவரை வழிபடும் வழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. இவற்றை தற்போது அறிந்து கொள்ளும் போது மனதில் பக்தியுணர்வு மேலோங்குகிறது. இறைவழிபாட்டோடும் அறநெறியோடும் வாழ விருப்பம் மேலோங்கும்போது சமுதாயத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் பெருகும்.*

**முக்கிய வார்த்தைகள்:** திருமால் வழிபாடு, தொல்காப்பியம், பரிபாடல், நற்றிணை, கலித்தொகை, திரிகடுகம்.

## முன்னுரை

திருமால் வழிபாடு மிகப் பழமையானது. அது பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. முல்லை நிலத்தில் திருமால் கோவில்கள் நிறைந்து இருந்ததாலும், அவரே முழுமுதற் பொருள் எனக் கருதியதாலும் தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் நில வரிசையில் முல்லை நிலத்தை முதலாவதாகச் சொன்னார். பிற்கால ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களைப் பண்ணோடு பாடுதற்கேற்ற வகையில் அமைத்ததற்கு வழிகாட்டியாக பரிபாடல் இருந்தது. திரிகடுகத்தில் பல பாரத நிகழ்ச்சிகள் காட்டப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் தற்கால மக்கள் அறிந்து கொள்ளும் போது பக்தியுணர்வு மேலோங்கும், அதனால் அறம் பெருகும், சமுதாயத்தில் அமைதி நிலவும்.

## தொல்காப்பியம்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்ற நூல் இது. திருக்குறள் மக்களுக்கு உயிர் நூலாகத் திகழ்வது போல் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நூலாகத் திகழ்கிறது. அதன் அகத் திணையியல் ஐந்தாவது நூற்பாவில் திருமால் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

'மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'1

இப்பாடலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என வகைப்படுத்தாமல், தொல்காப்பியர் முல்லையை முன் சொன்னார். அதற்குக் காரணமுண்டு. 'சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்' என்னும் முறை பற்றியே 'மாயோன் மேய காடுறை உலகம்' என்று மாயோனை முற்கூறினார். அப்பெருமானே முழுமுதற் பொருள் என்பது தொல்காப்பியர் கருத்தாதல்."2

**சங்க இலக்கியங்கள்**

சங்க இலக்கியங்கள் பலவற்றில் திருமால் வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் பரிபாடல், நற்றிணை, கலித்தொகை, திரிகடுகம் ஆகிய நூல்களிலுள்ள குறிப்புகளை ஆய்வு செய்வோம்.

**பரிபாடல்**

மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய பரிபாடலில் திருமாலைப் போற்றிப் பாடல்கள் ஆறு உள்ளன. இதன் முதற் பாட்டு திருமாலின் வாழ்த்தாகவே அமைந்துள்ளது. இப்பாடல் ஆயிரம் திருமுடியையுடைய ஆதிசேடன் திருமால் திருமுடியின் மேல் நிழல் செய்ய அத்திருமால் திருமகளோடு வீற்றிருக்கும் தன்மையை விளக்குகிறது. பரிபாடலில் வரும் திருமாலைப் பற்றிய கருத்துகள் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

வீடுபேற்றினை நல்கும் திருமால் நெருப்பில் வெம்மையாய், மலரில் மணமாய், கல்லினுள் மணியாய், சொல்லினுள் வாய்மையாய், அறத்தினுள் அன்பாய், மறத்தினுள் வன்மையாய், அனைத்துமாய் அனைத்தினுட் பொருளுமாய் விளங்குகின்றார் என்பதை:

தீயினுட் டெறல்நீ பூவினு னாற்றநீ
கல்லினுள் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினு ளன்புநீ மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலுநீ
வெஞ்சுட ரொளியுநீ திங்களு ளளியுநீ
அனைத்துநீ யனைத்தினுட் பொருளுநீ 3

என்ற பரிபாடல் பாடல் விளக்குகிறது.

"இடைக்கால வைணவ வளர்ச்சிக்குப் பரிபாடல் வழி வகுத்தது என்பதும் ஆழ்வார்கள் பாசுரங்களை அருளிச் செய்வதற்கு அது பெரிதும் துணைபுரிந்தது என்பதும் எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். வைணவ இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றிற்குப் பரிபாடல் ஒரு வழிகாட்டியாக விளங்கியுள்ளது. பரிபாடற் புலவர்கள் பிற்கால ஆழ்வார்களுக்குப் பாதை வகுத்துக் கொடுத்துள்ளனர். பாடும் பொருளிலும் பாடும் முறையிலும் திருமாலைப் பற்றிய பரிபாடல்களைப் பின்பற்றியிருத்தலின் நாலாயிர பிரபந்தம் அவற்றிற்குப் பெரிதும் கடமைப்பட்டது. புரிபாடல் இசையுடன் ஓதப்பட்டமை கண்டு ஆழ்வார்களும் தம் பாசுரங்களைப் பண்ணோடு பாடுதற்குரிய வகையில் அமைத்தனர். நாயன்மார்களும் இப்பண்முறை தழுவிப் பாடலாயினர். நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் தேவார திருவாசகங்களும் பண் அமைத்துப் பாடுதற்குக் காரணம் பரிபாடல் என்பது உளங்கொளற்குரியது."4

**நற்றிணை**

இந்நூல் ஒன்பது முதல் பன்னிரண்டு அடிவரையுள்ள 400 அகவற் பாக்களின் தொகுதியாகும். 175 புலவர்களால் பாடப்பெற்ற இந்நூலைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான். இதன் கடவுள் வாழ்த்து திருமால் வாழ்த்தாக இருக்கிறது.

அதில் திருமால் வேதத்தில் போற்றப்படும் பரம்பொருள் என்றும் அவர் உலகிற்குக் காரணப் பொருள் என்றும் அவர் எங்கும் பரந்து நிற்கும் வியாபக நிலை உடையவர் என்றும் ஒவ்வொரு பொருளிலும் கரந்து நிற்கும் அந்தர்யாமியாம் நிலையும் உடையவர் என்றும் நன்கு விளங்கப்படுகின்றன.
இதனை

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவ முடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
வியன்ற வெல்லாம் கயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப

தீதற விளங்கிய திகிரி யோனே
என்னும் அப்பாடலால் அறியலாம்.

### கலித்தொகை

"கலித்தொகையில் பாரத நிகழ்ச்சிகள் பல உவமைகளாக எடுத்தாளப்பட்டுள்ளன.

மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்புகுந் திட்டுப் புடைத்த ஞான்று

என்பதால் கண்ணன் கஞ்சனால் அனுப்பப்பட்டுக் குதிரை வடிவமாய் வந்த அசுரனைக் கொன்ற வரலாறு குறிக்கப்படுகிறது.

மல்லரை மறஞ்சாய்த்த மாஅல்போல்

என்ற கலித்தொகைப் பாடலில் கண்ணபிரான் மல்லரைக் கொன்ற வரலாறு கூறப்படுகிறது. பாண்டவர்களுக்காகத் தூது வரும் கண்ணனை அழிப்பதற்கு ஒரு தந்திரம் செய்தான் துரியோதனன். அத்தாணி மண்டபத்தில் மிக அழகான இருக்கை அமைத்தான். அதன் கீழே அமைக்கப்பட்ட பள்ளத்தில் மறைவான அறையை அமைத்து அதில் ஏராளமான மல்லர்களைப் பலவகை ஆயுதங்களுடன் நிறுத்தி வைத்தான். இருக்கையில் கண்ணன் அமர்ந்ததும் அவன் கனம் தாங்காமல் இருக்கை பள்ளத்தில் விழும் பள்ளத்தில் உள்ள மல்லர்கள் அவனைக் கொல்வதாக ஏற்பாடு. கண்ணன் ஆசனத்தில் அமர்நதவரை அப்படியே நடந்தது ஆனால் கண்ணன் மல்லர்களை அழித்து விட்டான் என்பதையே அந்த குறிஞ்சிக்கலி எடுத்துரைக்கிறது.

அஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தாலும் போன்ம்

என்ற பகுதியில் பாஞ்சாலியின் கூந்தலைத் தொட்டிழுத்த துச்சாதனனை வீமன் போரில் கொன்று தன் சபதம் முடித்த செயலைக் காணலாம்.

புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வி லைவ ரட்ட
பொருகளம் போலும்
என்பதில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நிகழ்ந்த பாரதப் போர்க்களம் குறிக்கப்படுகிறது."5

### திரிகடுகம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திரிகடுகம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்:

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் - நண்ணிய
மாயச்சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.

இப்பாடலில் திருமால் உலகளந்ததும், குருந்த மரத்தைச் சாய்த்ததும், மாயச்சகடம் உதைத்ததும் ஆகிய கதைக் குறிப்புகள் உள்ளன.

### நிறைவுரை

திருமால் முழுமுதற் பொருளாக எண்ணி அவரை வழிபடும் வழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. இவை பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் காணக் கிடக்கின்றன. கலித்தொகைப் பாடல்களில் பாரத நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. கம்சனால் அனுப்பப்பட்ட குதிரை வடிவத்திலிருந்த அசுரனை கண்ணன் கொன்ற வரலாறு ஒரு பாடலில் காணப் படுகிறது. பாண்டவர்களுக்காகத் தூது வந்த கண்ணனை துரியோதனன் தந்திரமாகக் கொல்ல ஏற்பாடு செய்தான். அதனை முறியடித்து துரியோதனால் அனுப்பப்பட்ட மல்லர்களை அழித்த வரலாறு மற்றொரு பாடலில் காணப்படுகிறது. இச்செய்திகளை தற்போது அறிந்து கொள்ளும் போது மனதில் பக்தியுணர்வு மேலோங்குகிறது.

### துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 5

2. பெரியாழ்வார் பாசுரங்கள் - ஓர் ஆய்வு போராசிரியர் டாக்டர் ஆ.க.பார்த்தசாரதி பரணி வெளியீடு சென்னை 1992 பக்கம் 25-26
3. பரிபாடல் பாடல் 3 63-68
4. பெரியாழ்வார் பாசுரங்கள் - ஓர் ஆய்வு போராசிரியர் டாக்டர் ஆ.க.பார்த்தசாரதி பரணி வெளியீடு சென்னை 1992 பக்கம் 43
5. பெரியாழ்வார் பாசுரங்கள் - ஓர் ஆய்வு போராசிரியர் டாக்டர் ஆ.க.பார்த்தசாரதி பரணி வெளியீடு சென்னை 1992 பக்கம் 49